செ.வெ.எண்.272 நாள்.25.04.2018.

திருநெல்வேலி மாவட்டம், கலிங்கப்பட்டியில், அருணாச்சலப் பிரதேசத்தில் இராணுவ பாதுகாப்பு பணியின் போது வாகன விபத்தில் உயிரிழந்த இராணுவ வீரர் ஹவில்தார் செல்வகுமார் உடலுக்கு தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார். மேலும், முதலமைச்சர் பொது நிவாரண நிதி ரூ.20 இலட்சத்திற்கான காசேலையை ராணுவ வீரர் மனைவியிடம் வழங்கினார்.

-------

திருநெல்வேலி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், கலிங்கப்பட்டியில், அருணாச்சலப் பிரதேசம், திபாங்வேலி மாவட்டம், ரோகின்சர்க்கில் தாலுகாவில் இடுலி கபாங் இடையில் இராணுவ பாதுகாப்பு பணியின் போது வாகன விபத்தில் உயிரிழந்த 20வது மதராஸ் ரெஜினமன்ட் பணியாற்றிய ஹவில்தார் செல்வகுமார் உடலுக்கு மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார். மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட முதலமைச்சர் பொது நிவாரண நிதி ரூ.20 இலட்சத்திற்கான காசோலையினை இராணுவ வீரரின் மனைவி திருமதி.மரியசெல்வம் அவர்களிடம் வழங்கினார். ராணுவ வீரர்களின் முழு அரசு மரியாதையுடன் 21 குண்டுகள் முழங்க இறுதிச் சடங்கு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.மனோகரன், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, திருநெல்வேலி லெப்னிடன்ட் கர்னர் கிரிஸ்ஸி, அசாம் மெட்ராஸ் ரிஜிமென் ராணுவப்பிரிவு இளநிலை படை அலுவலர் ஜெகன், முக்கிய பிரமுகர்கள் திரு.கண்ணன்(எ) ராஜு, திரு.ஆவின் ரமேஷ், திரு.சுப்பையாபாண்டியன், திரு.ஆறுமுகம் மற்றும் இராணுவ வீரர்கள், முக்கிய பிரமுகர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.